613

போதனை விஷய பூங்கொத்து



29 SEP 1945
MADRAS
613

Edit... A. Lourduswami, B.A., L.T.
Pu... ...raining School, Trichinopoly.

JL
NIIPP
NL 36·2
189995

...5 ஆகஸ்டு 1945 மலர் 2

...தனாமுறை பாடசாலை, திருச்சினாப்பள்ளி.

வருஷ சந்தா ரூபாய் 1. தனிப்பிரதி அணா 2.

போதன விஷயப் பூங்கொத்து

கொத்து 36] 15 ஆகஸ்டு 1945 [மலர் 2

பத்திராதிபர் குறிப்புகள்

நமது பாடசாலை கல்விக்கண்காட்சியும், பாடசாலைத் தினக்கொண்டாட்டமும் :—நம் பாடசாலையில் இரண்டு வருஷங்களுக்கு ஒரு முறை "கல்விக் கண்காட்சி நடைபெற்று வருவது வழக்கம். அவ்வாறு இந்த வருஷம் வரும் அக்டோபர் மீ 16-ம் உ-ல் தொடங்கி கல்விக் கண் காட்சி நடைபெறும். அவ்வமயம் நம் பழைய மாணவர்களுக்கும், புதுமாணவர்களுக்கும் அவரவர் திறமைகளை எடுத்துக்காட்டத்தக்க தோர் சந்தர்ப்பம் ஏற்படுகிறது. மேலும் இளைஞர்க்குக் கல்வி புகட்டுவதற்குப் போதன சாதனங்களில் உபகரணங்கள் முதன்மை இடத்தைப் பெறுகின்றனவல்லவா? இவ்வுபகரணங்களைப் பாடங்களுக்கேற்றபடி திறன்படச்செய்து பலர் பார்த்துப் பலன் எய்தும் படி, காட்சிசாலையில் காட்டுவது எவ்வளவு மேன்மையான காரியம் என்பதைக் கூறவும் வேண்டுமோ? ஆகவே நம்மாணவர்கள் அனைவரும் ஊக்கத்துடன் முயன்று காட்சிப் பொருட்களைத் தயாரித்துத் தாமும் மகிழ்ந்து, ஏனையோரையும் மகிழ்வித்து நம் "கண்காட்சி" முழு வெற்றியடையுமாறு உழைப்பார்களாக. நம் மாணவர்கட்குப் போதிய அவகாசம் தரவேண்டுமென்ற நோக்கத்தை யுன்னிதான் ஷை அறிக்கையை இம்மாதத்திலேயே பிரசுரித்துள்ளோம். அறியவும்.

மேலும் ஷை "கண்காட்சி" விஷயமாய்த் திறமை வாய்ந்த வேலைப்பாடுகளுக்குப் பரிசுகள் அளிக்கப்படும் என்பதையும் இதன் மூலம் தெரிவிக்கின்றோம்.

போதனவிஷயப் பூங்கொத்து காரியாலய அறிவிப்பு

நேயர்கள் தங்கள் சந்தாவைப் புதுப்பித்துக்கொள்ளும்போது தங்கள் சந்தா நம்பரையாவது, தங்கள் முழு விலாசத்தையாவது மணியாடர் கூப்பனில் குறிக்கவேண்டியது.

விலாசமாறுதலை அறிவிக்கும்போதும், தங்கள் சந்தா நம்பரையாவது, தங்கள் பழைய விலாசத்தையாவது தெளிவாய்க் குறிப்பிட வேண்டியது அவசியம்.

பத்திராதிபர்.

19 SEP 1945
MADRAS

உணவும் உடல் நலனும்

(T. S. G.)

"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்," என்றபடி நோய் வாய்ப்படாமல், இளையோரும், முதியோரும் தங்கள் உடலைப் பேணி வருதல் ஒரு முக்கியமான கடமையாகும். ஆனால் இளைஞர்களுக்கு இதன் அவசியமும், நலனும் நன்கு விளங்காதாகையால், பெற்றோரும் மற்றோரும் அவர்களது தேகசுகத்தைக் கவனிக்கப் பெரிதும் கடமைப்பட்டுள்ளார்—தேகசௌக்கியமானது நல்லபழக்க வழக்கங்களாலும், புஷ்டியைத்தரத்தக்க உணவைப் புசிப்பதாலும் அமைகிறது.

குழந்தைகள் விளையாட்டுப் பிரியர்கள். மண்ணிலும் மணலிலும் விளையாடுவதில் அவர்கட்கு வெகு சந்தோஷம். தெருக்களில் ஆங்காங்கு கிடக்கும் பொருள்களை எடுப்பதும் வாயில் போட்டு உருசி பார்ப்பதும் சகஜம். இதனால் அவர்கள் பற்பல நோய்களை வரவழைத்துக் கொள்ளுகிறார்கள். மேலும் வியாதியுள்ள பிள்ளைகளுடன் சேர்ந்து விளையாடும்போது தங்களுக்குத் தெரியாமலே அவ்வியாதிகளைச் சம்பாதித்துக் கொள்ளுவர்.

ஜலதோஷம், தலைவலி, இருமல் வயிற்றுக்கடுப்பு, இன்புளுவன்ஸா, ஜுரம் முதலிய பிணிகள் இளைஞர்களைச் சுலபமாய்ப் பற்றுகின்றன. மேலே கூறியபடி அவர்கள் இவ்வியாதிகளை வரவழைத்துக் கொள்ளுகின்றனர். நோய்கள் கண்ணுக்குத்தெரியாத நுண்ணிய நோய்க்கிருமிகள் ரூபமாக இருந்து பரவுகின்றன. இக்கிருமிகள், அழுக்கு, அசுத்தம், இருட்டுமுதலிய இடங்களில் ஏராளமாய் விருத்தியாகும். ஆகவே அசுத்தமான உணவு, பானம், பண்டம் இவற்றின் மூலமாகவே நோய் பரவுகிறது. இளைஞர்கள் எவ்வாறு நோயை வருவித்துக்கொள்ளுகிறார்கள் என்பதைத் திட்டமாய்க் கண்டுபிடிப்பது அசாத்தியம். நாம் எவ்வளவோ முன் எச்சரிக்கையுடன் பிள்ளைகளை நடத்திவந்தாலும் சில சமயங்களில் நாம் ஏமார்ந்துபோய்விடுகிறோம். எனவே பிள்ளைகளுக்குப் பிணிவந்துற்றாலும் அதனால் அவர்கள் வெகுவாய்ப் பாதிக்கப்படாமல், துன்புறாமலிருக்கும்படியாக அனுசரிக்கும் முறை யாதென்று சிறிது பார்ப்போம்.

கண், காது, மூக்கு, தொண்டை, அன்னக்குழாய், காற்றுக்குழாய் குடல் முதலிய உறுப்புகளின் உட்பாகம் ஒரு மெல்லிய ஜவ்வுத் தோலால், போர்வைபோல் மூடப்பட்டிருக்கிறது. வியாதிக் கிருமிகள் எந்தக் காரணத்தினாலாவது அங்குபோய்ச் சேருமாகில், அவை அந்தந்த பாகத்தில் விருத்தியடைந்து அந்தந்த நோயை விளைவிக்கின்றன. ஆனால் அந்த ஜவ்வு வலிமையுள்ளதாயும், வியாதிக் கிருமிகளுக்கு இடங்கொடாத தன்மையைப் பெற்றிருந்தாலும், அக்கிருமி

கள் அங்கே விருத்தியாவதில்லை: கிருமிகள் விருத்தியாகாவிடில் வியாயின் கொடுமையையும் அவ்வளவாகப் பாதிப்பதில்லை. ஆகவே சகல உறுப்புகளும் நோய்க் கிருமிகளால் தாக்கப்பட்டாலும் அக்கிருமிகள் விருத்தியடையாமல் நசித்துப்போகும்படி, அவ்வுறுப்புகளுக்குப் போதிய வலிமையை கொடுக்கத்தக்க வியாதிக் கிருமிகளை எதிர்க்கத் தக்க சக்தியளிப்பது ஜீவசத்துப் பொருள் அடங்கிய உணவேயாகும்.

வைத்திய நிபுணர்கள் ஆகாரப் பொருள்களின் தன்மைகளைப் பரிசீலனைசெய்து, பரீக்ஷித்துப் பரிசோதித்து ஒவ்வொன்றிலும் என்ன ஜீவசத்துப்பொருள் அடங்கி இருக்கிறதென்று கண்டுபிடித்து வைத்திருக்கிறார்கள். இதை “ஆங்கிலத்தில்” Vitamin என்பர். இந்த வைடமின் A, B, C, D என்ற நான்கு விதப்படும். வியாதிவந்த பின் அதற்குச் சிகிச்சை செய்வதைவிட வியாதி வராமல் தடுப்பதும் ஒருக்கால் வந்துற்றாலும் அதனால் உபாதை ஏற்படாமல் காப்பதும் மேலான காரியமல்லவா? எனவே வைத்தியர்களால் கூறப்படும் உணவுப்பொருள்களைக்கொண்டு உடலைப் போஷித்துக்கொள்வதால் பற்பல உறுப்புகளும் உறுதியடைகின்றன. விசேஷமாக இளமைப் பருவத்திலேயே உறுப்புகளைப் பலப்படுத்திக்கொள்ளவேண்டியது அத்தியாவசியம். ஆகவே இதனடியில்வரும் ஜீவசத்துப் (Vitamin A) பொருள் அடங்கிய பதார்த்தத்தைப் போஜனத்துடன் சேர்த்துப் புசிக்கும்படி செய்யவேண்டியது அவசியமாகும். குழந்தைகளை வளர்க்கும் விஷயத்தில் அவர்களது போஜனத்தின் தன்மையை அறியாமல் வயிற்றை எப்படியாவது நிரப்பிவிட்டால் போதுமென்றூட்டும் உணவு சாரமற்ற உணவே. வைடமின் A அடங்கிய பொருள்களாவன :—

189995

மீன் எண்ணெய், (Cod-liver oil), வெண்ணெய், பாலாடை, முட்டை, பால், கீரைகள், ஆரஞ்சுப்பழம், சீமைத்தக்காளி ஆகியவற்றில் ‘வைடமின் A’ மலிந்திருக்கிறபடியால் பிள்ளைகளின் போஜனத்தில் ஷை பொருள்களில் இரண்டொன்றைச் சேர்த்துப் பிரதிதினமும் கொடுத்தல் அவசியமாகும்.

இவற்றுள் மீன் எண்ணெய், சிறுவர்களின் உறுப்புகளை வலுப்படுத்துவதில் மிகவும் சிறந்தது. எனவே ஒவ்வொருநாளும் கொஞ்சம் அதைக் கொடுத்து தேகபுஷ்டியை வளர்க்கவேண்டும்.

பால் ஒரு நேர்த்தியான சத்துப்பொருள். பசியகீரைகளை நாம் சமைத்து உண்பதால் ஜீவசத்து விருத்தியாகிறது. பச்சைப்புல், அகத்திக்கீரை முதலிய பசுந்தாள்களைக்கொண்டு போஷிக்கப்படும் பசுவின் பால், வைக்கோல், காய்ந்தபுல், தட்டைகள் பிண்ணாக்கு முதலிய உலர்ந்த தாள்களால் போஷிக்கப்படும் பசுவின்பாலைக்காட்டிலும், A வைடமின் சத்தை மிகுதியாகக்கொண்டுள்ளது. எனவே, பசுவுக்குத்

தழைகள், புல் முதலிய பைங்கூழ்களைத் தீனியாக அளிக்கவேண்டும். ஆடு எளியோர் பசு. மாட்டுப்பாலைவிட ஆட்டுப்பால் மேலானது. இலைதழைகளையே உண்ணும் ஆட்டின்பாலின் மகிமையை யுன்னியன்றோ நமது நாட்டு வைத்தியர்களும் அதனைப் போற்றுகின்றனர். காந்திஜீயும் ஆட்டின்பாலைத் தமது முக்கிய உணவாகக்கொள்ளுகின்றனர். ஆட்டின் இறைச்சியும் இக்காரணம் பற்றியே சத்துள்ள உணவாகக் கருதப்படுகின்றது.

பாலைக் காய்ச்சும்போது அதை மூடாமல் திறந்துவைத்துக் காய்ச்சினால் அதிலடங்கியுள்ள ஜீவசத்து வீணாய்போய்விடுகின்றது. எனவே, பாலை எப்போதும் மூடியே காய்ச்சவேண்டும். இதுபற்றியே நெய்யைவிட வெண்ணெய் மேலானதென்றும், வெண்ணெயில் ஜீவசத்துக் கெடாமலிருக்கிறதென்றும் நாம் அறியவேண்டும்; கீரைகள்; கோசுகள் முதலிய சாக பதார்த்தங்களைச் சமைக்கும்போது அவற்றிலடங்கிய வைடமின் கெட்டுப்போகாவண்ணம் அவற்றை மூடிவைத்தே பக்குவம் செய்வது முறையாகும். வேகவைத்த நீரை வடித்துவிடுவது பெரிய குறையாகும்.

இவ்வாறாக ஜீவசத்துப்பொருள்கள் அடங்கியுள்ள பதார்த்தங்களை முறையறிந்து போஜனத்தோடு சேர்த்து உண்ணும்படிச் செய்வதால், பிள்ளைகளது உறுப்புகள் போதுமான வலிமைபெற்று, வியாதிக் கிருமிகளை எதிர்க்கவல்லதான சக்தியை அடைகின்றன. எனவே வருமுன் காப்பதே மதியெனத்தேர்ந்து பிள்ளைகளின் உடல்நலத்தைப் பேணி நோயற்றவாழ்வை எய்தும்படிச் செய்வது நமது கடமையாகும்.

யோசனைக் கணக்கு

இரண்டு சிநேகிதர்கள் ஒருநாள் மாலை உலாத்திக்கொண்டிருந்தனர். அப்பொழுது ஆகாயத்தில் சில கிளிகள் பறந்து கொண்டிருந்தன. சிநேகிதரில் ஒருவர் இங்கு பறக்கும் கூட்டத்தில் அனேகமாக 100 கிளிகள் இருக்கும், என்றார். அதற்கு அந்தக்கூட்டத்தில் பறந்த தலைமைக் கிளி கூறியதாவது:—'எங்களையும், எங்களைப்போல் இன்னொரு மடங்கையும், அம்மடங்கில் பாதியையும், அந்தப்பாதியில் பாதியையும், உங்களில் ஒருவரையும் சேர்த்தால் 100 ஆகும்'. அப்படியானால் அக்கூட்டத்தில் பறந்த கிளிகள் எத்தனை?

S. Seetharaman.

சாரண இயக்கமும் அதன் பயனும்

(R. Mariasusai)

சாரண இயக்கம் என்பது பிள்ளைகளைச் சிறு வயதிலிருந்தே சமூக சேவைக்கும் சகோதரத்துவத்திற்கும் பழக்கும் ஒரு குழாம் ஆகும்.

இவ்வியக்கத்தின் மேன்மையைப்பற்றி 'பொழுதுபோக்குமூலம் கல்வி' (Education through recreation) என்னும் நூலின் பேராசிரியர் L. P. Jackes என்பவர் கூறுவதாவது: "பையன்களிடமிருக்கும் விளையாட்டுப்புத்தி, துடுக்குக் காரியம் செய்யும் ஆவல், விஷமப்புத்தி இவைபோன்ற மனோபாவத்தை உபயோகித்து அவர்களை தைரியம், பொறுப்பு அறிதல், கட்டுப்பாடு முதலிய நற்குணங்களில் பயிற்சித்து அக்குண மேன்மையால் ஓர் உலக சமூகமாக செய்தவர் பேடன் பவுல். இதைவிடச் சிறந்த கல்வி அபிவிருத்தி முறை கண்டுபிடிக்கவில்லை. பொழுதுபோக்கு வழியில் ஓர் கும்பலை சமூகமாகத் திருத்தி, அவ்வழியையே ஓர் கல்வித்திட்டமாக்கியிருப்பதற்கு உதாரணம் சாரண இயக்கந்தான்."

இதிலிருந்து கல்வி அபிவிருத்தி முறையில் சாரண இயக்கம் ஓர் சிறந்த சாதனமாக இருப்பது நன்கு விளங்குகிறது. இதை ஏற்படுத்திய பேடன் பவுல் என்பவருடைய வரலாற்றைச் சற்று ஆராய்வோம்:

உலக சாரணத் தலைவராகிய Lord Robert Stephenson Smith Baden-Powell, K.C.B., K.C.V.O. என்பவர் 1857-ம் ௵ பிப்ரவரி மாதம் 22-ம் தேதி, ஆக்ஸ்பர்ட் (Oxford) நகரத்தில் ப்ரோடஸ்டண்ட் பாதிரியாராகிய Rev. Prof. Baden Powell என்பவருக்குப் பிறந்தவர். இவர் சார்டர்ஹவுஸ் (Charterhouse) என்னும் பட்டணத்தில் கல்விபயின்று 1876-ம் ௵ போயர் சண்டையில் சேர்ந்து தென் ஆப்ரிக்கா, ஆப்கானிஸ்தானம், இந்தியா முதலிய இடங்களிலும், ராணுவத்தில் உற்சாகத்துடன் உழைத்திருக்கிறார். இவ்வித உற்சாகத்தின் பயனாக Knight Commander of Victorian order, Knight Commander of Bath என்னும் கௌரதா பட்டங்களைப் பெற்றார். பிறகு 1910-ம் ௵ மே-மாதத்தில் தம் பதவியிலிருந்து விலகி தம் பலத்தையும், ஜீவியத்தையும் சாரண இயக்கத்தின்பொருட்டு செலவிட ஈடுபட்டார். இவர் 1920-ம் ௵ ஆகஸ்டு-௴ 7-ம் தேதி சனிக்கிழமையன்று லண்டனிலுள்ள ஒலும்பியா என்னுமிடத்தில் 26 தேச பிரதிநிதிகளில் உலக சாரண இயக்கத் தலைவர் என்று பிரகடனம் செய்யப்பட்டார்.

இவர் ராணுவத்தில் இருந்தபோது போரில் காயமடைந்தவர்களுக்கும், வியாதியடைந்தவர்களுக்கும் உதவிசெய்யும்பொருட்டு சிலரைச் சேர்த்து ஒரு இயக்கம் இயற்றப்பட்டது. அவ்வியக்கத்திற்குத் தலைவராக இவர் நியமிக்கப்பட்டார். இவ்வியக்கத்தினால் ஏற்பட்ட பலனை நன்கறிந்தவராதலால், உலக மக்களும் இதைப்போன்ற ஸ்தாபனங்களால் நன்மையடையவேண்டுமெனக் கருதி ஏற்படுத்தலானார். இதை முதலில் இந்தியாவில் ஏற்படுத்தியவர் (Dr. Anne Besant)

அனிபெசண்ட் அம்மையார். தற்காலம் இவ்வியக்கம் கல்வி ஸ்தாபனங்களில் ஸ்தாபிக்கப்பட்டு செவ்வனே நடைபெற்றுவருகிறது.

ஸ்தாபனங்கள் :—நமது சென்னை இராஜதானியில் மூன்று சாரண இயக்கங்கள் நடைபெற்று வருகின்றன. அதாவது:

(1) தென்னிந்திய கத்தோலிக் சாரண இயக்கம். இதில் குறிப்பிட்ட சிலவகுப்பினரே சேர்த்துக்கொள்ளப்படுகிறது.

(2) சென்னை மாகாண "பாய் ஸ்கவுட்" (Boys Scout) சங்கம்.

(3) ஹிந்துஸ்தான ஸ்கவுட் சங்கம்.

சாரணீயத்தின் மூன்று பிரிவுகள்

பிள்ளைகளின் வயதிற்குத் தக்கபடி மூன்று பிரிவுகள் ஏற்படுத்தி ஒவ்வொரு பிரிவுக்கும் தனித்தனிப் பயிற்சிகள் கொடுக்கப்படுகின்றன.

(1) 7 வயதுமுதல் 11 வயது வரையுள்ள ஆண்களுக்கு கப்ஸ் (cubs) என்றும், பெண்களுக்கு புளூபேர்ட்ஸ் (Blue birds) என்று பெயர். இவர்கள் பின்பற்றவேண்டிய வாசகம் 'சிறந்ததைச் செய்' (do your best).

(2) 11 வயதுமுதல் 17 வயது வரையுள்ள ஆண்களுக்கு சாரணர் (Scouts) என்றும், பெண்களுக்கு கைட்ஸ் (Guides) என்றும் பெயர். இவர்கள் அநுசரிக்கவேண்டிய வாசகம் "தயாராயிரு" (Be prepared).

(3) 17 வயதிற்கு மேற்பட்ட யுவர்களுக்கு ரோவர் (Rover) என்றும், யுவதிகளுக்கு ரேஞ்சர் (Ranger) என்றும் பெயர். இவர்கள் கைக்கொள்ளவேண்டிய வாசகம் "சேவை" (Service).

சாரண இயக்கத்தில் சேர்தல்

இவ்வியக்கத்தில் சேர்வதற்குமுன், நான் பிரமாணிக்கமாக நடப்பேன் என்று உறுதிமொழி கூறவேண்டும். இதற்குப்பிறகு தான் ஒரு சாரணன் என கொள்ளப்படுவான். உடுப்பு அடையவும் யோக்கியமுள்ளவனுகவும் ஆவான். மேலும் சாரணன் அவ்வியக்கத்திலுள்ள 10 சட்டங்களுக்கும் கீழ்ப்படிந்து நடக்கவேண்டும்.

நன்மைகள் :—சாரணன் தினம் ஒரு நன்மையாவது செய்ய எதிர்பார்க்கப்படுகிறுன். இது பிரதம சிக்ஷை, பிறரைக் காப்பாற்றுவது, நெருப்பணைப்பு முதலிய வேலைகளிலிருந்து நன்கு புலப்படுகிறது. மேலும் திருவிழாக்கள், பொதுவான கூட்டங்கள் முதலியவற்றிலும் அமைதியை உண்டுபண்ணுகிறுர்கள்.

மேற்கூறப்பட்ட சேவைகளின்மூலம் பொறுமை, தன்னடக்கம், சகிப்புத்தன்மை, உழைப்பின் மேன்மை, சகோதரத்துவம் முதலியவை விர்த்தியாகின்றன. மேலும் இவர்கள் சாரண சட்டதிட்டங்களில் நடக்கவேண்டியிருப்பதால், மனோதிடமும், தேகபலமும் உடையவர்களாக இருக்கவேண்டும். (Sound mind in a sound body) என்றபடி அவர்கள் தேகம் பலமடைவதற்குத் தேவையான பயிற்சிகள் அளித்து அவைகளில் பழக்கவேண்டும்.

ஆசிரியர்களாகிய நாம் நம்முடைய தொழிலை நேர்மையுடன் நடத்தவேண்டுமென்றால் ஒவ்வொருவரும் சாரண இயக்கத்தில் சேர்ந்திருப்பதுடன் அவர்கள் பள்ளிக்கூடங்களிலும் இவ்வியக்கத்தை ஏற்படுத்தவும் வேண்டும். இவ்வியக்கத்தை நாம் நடத்துவதால் கலாதிட்டத்திற்குப் புறம்பான ஒரு வேலையைச் செய்தவர்களாகவும் ஆவோம். இதனால் பள்ளிக்கூடத்தின் மேன்மையும் உயர்கிறது. பையன்களும் நற்குணங்களில் பயிற்சிபெற்று தங்கள் வாழ்நாட்களைத் தக்க வழியில் நடத்தவும் உதவுகிறது. கடைசியாக பொருளாதாரத்திலும் நமக்கு சர்க்காரின் திரவிய சகாயம் அதிகரிக்கிறது. ஆனதால் ஆரம்ப ஆசிரியர்கள் எல்லோரும் இவ்வியக்கத்தில் சேர்ந்தும், தங்கள் பாடசாலையில் ஸ்தாபனங்களை நியமித்தும் தங்களுடைய கடமையை நிறைவேற்றுவதோடு தம் பொறுப்பில் விடப்பட்ட பாலர்களின் நலத்தையும் சீர்படுத்த முன்வரும்படியாக வணக்கத்துடன் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

போதனாமுறையும் பவணந்தி முனியும்
(M. A. S. T. P.)

தற்காலத்திலே ஒருவர் எவ்வளவு கல்விப்பெருக்கு உடையவராக இருப்பினும், அவர் ஓர் போதனாமுறைக் கலாசாலையை அடுத்து அம்முறையைச் செவ்வனே கற்றுணர்ந்த பெரியாரிடம் கற்றுக் கேட்டுணர்ந்தபின்னரே தாம் கற்ற நூற்பொருளைப் பிறர்க்கு அறிவுறுத்தற்குத் தகுதியுடையவர் ஆவார் எனக் கொள்ளப்படுகின்றனர். இதனாற் யாம் அறிவது கலைப்பயிற்சி எவ்வளவு இருப்பினும் பயிற்றுவித்தற்குத் தனியறிவு பெறல்வேண்டும் என்பதே. அப்பயிற்றுவிக்கும் அறிவைப் பெறாதார் பயின்றும் பயன்பெறாதவர் ஆவார் பயிற்றுதற்றொழிலுக்கு. இதன் காரணமும் உய்த்துணர்தற்பாலதே: தற்காலத்தியப் பாடமுறைகள் பெரும்பாலும் உத்தியோகத்தைத் தழுவியதே யாகும். அப்பாடமுறையில் எழுதுதல், படித்தல், கணித்தல் முதலியவை கற்பிக்கப்படுகின்றனவேயன்றிக் கற்பிக்கும் முறை கற்பிக்கப்படிலது. அதனால் கற்போர் தாம் கற்றுணர்ந்தாரேயன்றிக் கற்பிக்கும் முறை உபாய முதலியவற்றை அறிந்திலர். இக்குறையை நீக்குதற்பொருட்டே அரசியலாரும் அவரனுமதிபெற்றுப் பிற பெரியார்களும் நாட்டின் பல பாகங்களிலும் கலாசாலைகளை நிறுவியதோடு போதனாசாலைகளையும் ஆங்காங்கே அமைத்து முறைப்போதனை செய்துவருகின்றனர். அம்முறைப்பயிற்சி பெறுவார்க்கு அரசாங்கமும் ஓராற்றான் உதவிசெய்துவருதலும் கண்கூடு. இத்தகைய முறைக் கலாசாலைகள் நம்மாற் நடத்த தமிழகத்தில் இருந்ததாக நாம் அறியக் கூடவில்லை. (தொடரும்.)

189995

பாடக் குறிப்பு

பாடம் :—பூகோளம். வகுப்பு :—V.

நோக்கம் :—துறைமுகம், அதன் உபயோகங்கள் இவற்றைப் பற்றி அறிவு உண்டாக்குதல்.

உபகரணம் :—மாதிரி உருவங்கள் (models) ; சென்னை மாகாண தேசப்படம் (map of the Madras Presidency).

பீடிகை :—வண்டிப்பேட்டை, மோட்டார்-பஸ்-நிற்குமிடம், ரயில்வே ஸ்டேஷன் இவை ஒவ்வொன்றும் எதற்காக ஏற்பட்டிருக்கிறது? உபயோகம் என்ன? என்ற சில கேள்விகள் கேட்டு சம்பாஷித்து அவ்வாறே கப்பல்கள், தங்குவதற்கும் வசதியான இடம் வேண்டுமல்லவா? அதைப்பற்றி ஆராய்வோமெனக் கூறவும்.

விஷயம் :—(1) கப்பல் தங்குவதற்காக ஏற்படும் இடம் துறைமுகம்.

முறை :—இவ்விஷயத்தை வரவழைக்க : தரைமார்க்கமாய்ப் பிரயாணஞ்செய்வதற்கும், சாமான்கள் அனுப்பவும் வசதியாக ரயில்வே ஸ்டேஷன்களும்—ஷெட்டும் (goods sheds) ஏற்பட்டிருப்பதுபற்றி கேள்விகள் போடவும். அவ்வாறே கடல்மார்க்கம் பிரயாணம் செய்தல், சாமான்கள் ஏற்றல், இறக்குதல் காரியங்களுக்கு வசதியான இடம்—துறைமுகம்.

விஷயம் :—(2) கடல் ஜலம் தரைக்குள் குடைந்துசென்று, கரைக்குச் சமீபத்தில் ஆழமாய் ஏற்பட்டுள்ள இடம் இயற்கைத் துறைமுகம். அவ்வாறின்றி மனிதர்களால் கட்டப்படுவது செயற்கைத் துறைமுகம்.

முறை :—ஏரி, குளம் முதலிய நீர் நிலைகளின் கரையோரத்தில் குடைவுகள் ஏற்பட்டிருப்பதைக் காட்டியோ, ஞாபகப்படுத்தியோ ஷை விஷயத்தை விளக்கவும். மாதிரி உருவங்களைக் (models) காட்டி இயற்கைத் துறைமுகத்துக்கும் செயற்கைத் துறைமுகத்துக்கும் உள்ள வித்தியாசங்களையும், நன்மை தீமைகளையும் விளக்குக. சென்னை மாகாண-தேசப்படத்தில் கொச்சி, விசாகப்பட்டினம், சென்னை, இலங்கைத்தீவிலுள்ள கொழும்பு முதலிய துறைமுகங்களைக் காட்டி, ஒவ்வொன்றுக்குமுள்ள வித்தியாசங்களைப் புலப்படுத்தவும்.

விஷயம் :—(3) துறைமுகங்களின் உபயோகங்கள் : 1. கப்பல்கள் பத்திரமாய்த் தங்கியிருக்க ; 2. பிரயாணிகள் சௌகரியமாய் ஏறி, இறங்க ; 3. சாமான்களைச் சுலபமாய் ஏற்றி, இறக்க.

முறை :—ரயில்வே ஸ்டேஷன்-பாஸஞ்சர் ப்ளாட்பாரம் (Passenger Platforms) சாமான்கள் இடம் (Goods Shed) இவற்றைப் பற்றி ப்ரஸ்தாபித்து, சம்பந்தப்படுத்தி விளக்குக.

அப்பியாசம் :—1. இயற்கைத் துறைமுகத்தின் அனுகூலங்கள் யாவை? 2. சென்னை மாகாணத்திலுள்ள ஒரு இயற்கை, ஒரு செயற்கைத் துறைமுகத்தைக் கூறுக. 3. செயற்கைத் துறைமுகம் ஏன் அவ்வளவு பாராட்டத்தக்கதல்ல. 4. கடல்மார்க்கம், துறைமுகம் இவை ஏன் ஏற்படவேண்டும்? இவற்றின் நன்மைகள் யாவை?

சிறு கதை

நரி முக தரிசனம்

G. S. William Doraisami

வெகுகாலத்துக்குமுன் ரத்தினபுரியில் ஒரு ஏழைக் குடியானவர் இருந்தார். சிறிது கல்வியறிவு உடையவர். அவருக்குத் தேவையான பொருள்களை அவரது பெற்றோர் அவருக்குத் தேடிவைக்கவில்லை. ஆயினும் அவர் தனது ஏழ்மையை நினைத்து வருந்தாமல் கடவுளைத் தியானம் செய்துகொண்டிருப்பார். காட்டில் கிடைக்கும் புல்லரிசி, காய், கனி, கிழங்கு இவற்றைக்கொண்டு தமது ஜீவனத்தை நடத்திவந்தார்.

ஒருநாள் சாயந்திரம் அவர் இருந்த ஊருக்கு ஒரு ரிஷி வந்தார். அவர் பார்வைக்கு அவலட்சணமாகத் தோன்றினார். அவருடைய முகம் குறுகி நரியினது முகம்போல் தோன்றினது. அவரைப் பிள்ளைகள் எல்லோரும் பரிகாசம் பண்ணிக்கொண்டும் அவரைச் சூழ்ந்துகொண்டும் வந்தார்கள். அவ்வூரில் உள்ள மக்கள் யாரும் அவரை உபசரிக்கவில்லை. அவரோ அதிக களைப்புடையவராகக் காணப்பட்டார். அப்பொழுது அவ்வழியே வந்த நம் ஏழைக் குடியானவர் அவரைக் கண்டார், கண்டவுடன் பக்தியோடு அவர் காலில் விழுந்து வணங்கினார். அவரைத் தன் இல்லம் அழைத்துப் போய் உபசரித்தார். அன்று இரவு தான் வைத்திருந்த எளிய ஆகாரத்தை அவருக்குக் கொடுத்தார். படுப்பதற்கு சகல வசதிகளும் செய்து கொடுத்தார். ரிஷியின் மனம் சந்தோஷப்பட்டது.

மற்றவர்களைப்போல் இல்லாமல் அவர் தன்னைக்கண்டு அலட்சியம் செய்யாமல் தன்னை உபசரித்ததற்காக அவரை ஆசீர்வதித்தார்.

மறுநாள் ரிஷி அவ்விடத்தைவிட்டுக் கிளம்பும்போது குடியானவரைப் பார்த்து "அப்பா, நீ காட்டுக்குப் புல்லரிசி கொண்டுவரப் போகும்போது, என்று உன் கண்களில் என் முகத்தைப்போன்ற நரி தென்படுகிறதோ அன்று உனக்கு ஒரு பெரிய நன்மை கிடைக்கும் சுகமாக இரு" என்று வாழ்த்திவிட்டுச் சென்றுவிட்டார்.

சில நாட்கள் சென்றுவிட்டன. குடியானவர் சில நாட்களாக நரி தன்முன் வரும் என்று எதிர்பார்த்தார். ஆனால் அப்படி ஒன்றும்

நிகழவில்லை. ஆகையால் அவர் வருத்தப்படாமல் வழக்கம்போல் தன் காரியங்களை செய்து வந்தார்.

ஒருநாள் இவர் காட்டுக்குப்போகும்போது எதிரே நரி ஒன்று ஓடி வந்தது. இதைக்கண்ட குடியானவருக்கு சந்தோஷம் தாங்கவில்லை. தனக்கு ஏதோ நன்மை அக்காட்டில் இருந்துதான் கிடைக்கும் என்று எண்ணி காடு முழுதும் அலைந்துகொண்டிருந்தார். அப்படி அலையும்பொழுது வழி தவறிவிட்டது. பசியைத் தணிக்க ஆகாரம் ஒன்றும் கிடைக்கவில்லை. கடைசியாக எல்லாம் நன்மைக்கே என்று சொல்லி சோர்ந்து ஒரு இடத்தில் உட்கார்ந்தார். பசியினாலும் அலைந்ததாலும் களைப்புமேலிட்டு சோர்ந்து மயங்கி அப்படியே கீழே வீழ்ந்துவிட்டார்.

அன்றையதினம்தான் ரத்தினபுரிக்கு அடுத்த தேசமாகிய அளகாபுரி தேசத்தின் அரசன் புத்திரசந்தானம் இல்லாமல் இறந்து போனார். அன்று அந்நாட்டு வழக்கபடி புது ராஜாவைத் தேடிப் பிடித்துக்கொண்டு வரும்படி அவ் ஊர் மகா ஜனங்கள் பட்டத்து யானையை அலங்கரித்து அதனிடம் ஒரு புஷ்ப மாலையைக் கொடுத்தனுப்பினார்கள்.

அது காட்டுக்கு வேட்டையாட வரும் வழக்கம்போல் காட்டை நோக்கி வந்தது. வந்த யானை காட்டில் அலைந்து கொண்டிருக்கும் போது மூர்ச்சித்துக் கிடந்த இந்தக் குடியான இளைஞரைப் பார்த்து அவரைத் தூக்கிக்கொண்டு அளகாபுரிக்குப் போயிற்று. அங்கு மந்திரி, பிரதானி, ஜனங்கள் இவரைக்கண்டு சந்தோஷித்து உடனே அவரை மஞ்சத்தில் படுக்க வைத்து அவருடைய மூர்ச்சையைத் தெளிவித்து வேண்டிய உபசரணைகள் செய்தனர்.

மூர்ச்சை தெளிந்து எழுந்த குடியானவர் தாம் ஒரு அரண்மனையில் இருப்பதையும் தம்மைச்சுற்றி மந்திரி முதலாயினோர் இருப்பதையும் கண்டு ஆச்சரியம் கொண்டு அவர்களை இது விஷயம் என்ன என்று வினவினார்?

அவர்களும் அவருக்குப் பணிவாக உற்ற விஷயங்களைச் சொன்னார்கள். அவர் உடனே கடவுளை நமஸ்கரித்து தனது விருத்தாந்தங்களையும் சொல்லி மற்றவர்களும் அவரைப்போல் கடவுள் பக்தியிலும் பெரியயோரை மரியாதையாக வழிபடவும் செய்தால் கடவுள் நம்மைக் காப்பாற்றுவார் என்று சொல்லி முடித்தார்.

அதன்பின் அடுத்தநாள் அவரது பட்டாபிஷேகம் நடந்தது. அவர் தனது சிம்மாசனத்தை ரிஷியின் ஞாபகமாக நரிமுகம்போல் செய்து வைத்துக்கொண்டார். அதுமுதல்தான் ஜனங்கள் எவருக்காவது அதிர்ஷ்டவசத்தால் எதாவது கிடைத்தால் அவன் "நரி முகத்தில் விழித்தவன்" என்று சொல்லிப் பரிகாசம் செய்வார்கள். இது காலக்கிரமத்தில் ஒரு பரிகாச மொழியாக மாறிவிட்டது.

நாடோடி இலக்கியம்

(ஏற்றப்பாடல்)

[வீ. தூசைமாணிக்கம்]

என் அழறே பெண்ணே?
என் அழறே பெண்ணே?
என் அழறே பெண்ணே நீ
மான் அழுதாப் போலே.
மான் அழுதாப் போலே—உன்னை
மாமன் அடிச்சானோ?
மாமன் அடிச்சானோ
மல்லிகைப் பூச் செண்டால்?
மாமன் அடிக்கலே—ஒரு
மனிதர் தீண்டவில்லை
புருஷன் அடிச்சானோ—ஒரு
பெரப்பங் கழியாலே?
புருஷன் அடிக்கலே—ஒரு
பூதர் தீண்டவில்லை
கொழுந்தன் அடிச்சானோ—உன்னை
கோத் தடியினாலே?
கொழுந்தன் அடிக்கலே
ஒருத்தரும் தீண்டவில்லை
(நான்) வட்டியிலே போட்ட சாதம்—சாமி
வாரித்தின்ன மைந்தனில்லை!
கிண்ணியிலே போட்ட சாதம்
கிறித்தின்ன பிள்ளை இல்லை!
தண்ணிக்குப் போகையிலே
தடம் மறிக்கப் பிள்ளையில்லை!
ஊருக்குப் போகையிலே
உடன் வரப் பிள்ளையில்லை!
அங்காடிக் கூடையை
அழைத்துவர மைந்தனில்லை!
வெங்காயக் கூடையை
விலைமதிக்க மைந்தனில்லை
மழைபெய்த வாசலிலே—நான்
மைந்தனடி காணேனே!
மைந்தனடி காணேனே—நான்
மறுகி அழுகிறேனே!

குறிப்பு:—கிராமாந்தரங்களில் தண்ணீர் இறைக்கும்பொழுது இம்மாதிரி பாடல்களைப் பாடுவதைக் கேட்டிருக்கலாம். பெண்ணொருவள் பிள்ளை இல்லாக் குறையை இப்பாடல் விளக்குகிறது. இதன் எண்ணிக்கை 64 சால் தண்ணீரைக் குறிக்கும்.

கேள்விகள், கேள்விகளின் இலக்ஷணங்கள், கேள்விகேட்கும் முறைகள்

(T. S. G.)

எத்தொழிலாளியும் தான் செய்துமுடிக்கவேண்டிய வேலைக்கேற்ற ஆயுதங்களைச் சேகரித்து, அவற்றைச் செவ்வனே உபயோகிக்கும் வகையறிந்து, தன் வேலையைத் தொடங்குவதுபோல், உபாத்திமைத் தொழிலை ஏற்றுக்கொண்டவர்களும் தம் தொழிலுக்குற்ற இன்றியமையாத கருவிகளையடைந்து, அவற்றைக் கையாடும் வகையறிந்து, தம் அலுவலைத் துவக்கவேண்டுமன்றோ? ஆசிரியர் கருவிகளாவன :—

(1) கேள்வி கேட்டல், (2) பொருள் உரைத்தல், (3) உதாரணங்கள், திருஷ்டாந்தங்கள் எடுத்துக் கூறல், (4) பொருள்கள், படங்கள் போன்ற உபகரணங்களைக்கொண்டு விளக்குதல், (5) கரும்பலகையில், உருவம், விளக்கம் வரைந்து தெளிவாக்குதல் முதலிய வியாக்கியானங்களாகும்.

இவற்றுள் மிகவும் முக்கியமான கருவி கேள்விகளே. ஆனால் கேள்வி கேட்டல் கொஞ்சம் கஷ்டமான வேலைதான். குறிப்பற்ற கேள்விகள் கண்டபடியெல்லாம் கேட்கப்பட்டு வருகின்றன. போதனா முறையில் கைதேர்ந்தவர்களாய் இருப்பதற்குரிய பல திறமைகளில் கேள்விகேட்கும் திறமையே சாலச் சிறந்ததாகும். மகா சாமார்த்தியம் வேண்டும். எனவே, கேள்வி கேட்பதின் நோக்கம், வகை, முறை, முதலியவற்றைப்பற்றிச் சிறிது ஆராய்வோம் :—

I. நோக்கம்

(1) ஆசிரியர் கேள்வி கேட்டால் பிள்ளைகள் விடைதரல் வேண்டும்; இது ஞாயமே. ஆனால் விடை கூறுவதற்கு ஆதாரமாய் விஷய ஞானம். பிள்ளைகளிடத்தில் அந்த விஷய ஞானம் அல்லது அறிவு உண்டாவதற்கு அடிப்படையாவது கவனம். அக்கவனம் அமையவேண்டுமானால் அவர்களது புத்தி இயங்கி சுறுசுறுப்படைதல் வேண்டும். அத்தகைய சுறுசுறுப்பைத் தூண்டவும் அது தளராமல் இருக்கும்படி பார்க்கவும் உதவுவது கேள்விகளே. கேள்வி கேட்பதின் முக்கிய நோக்கமும் இதுவே.

(2) முன்னறிவைச் சோதிப்பது. பாட ஆரம்பத்திலேயே கேள்விகளின் மூலமாய்ப் பிள்ளைகளின் பழைய அறிவைச் சோதிக்க

சங்கீதம்

[B. Thomas Victor]

பல்லாரி ஜில்லா வாழ்க்கை

(டோமா—மெட்டு)

; ஸ ம க ம ப பா ப ப த || நி த ப ம க ம ப த ப ம கா ||
பல் லாரி இடை யர்களின் || பாங்கு றும்நல் வாழ்க் கைதனை ||

; க ம ப த ப த ப ம மா || ப த ப ம ம ப க ம க ரி ஸா ||
சொல்லுகிறேன் கேட்டி டுவீர் || இசையு டனே பாலர் களே ||

ரீ ; , க ம கா ஸா ஸ || ரி க ம ரி க ம ரி க க ரி ஸா ||
வா . . ரும் மிக || உற் சாகமாய் இங்கு வந்து ||

ஸா ; க ரி ஸா , ; , ||
சே . . . ரும்

2. மலைகள் சுற்றியுள்ள மேடான நாடதனில்
சுலபமாய் மழைபொழிய செழிப்புடனே காணுமது தானே
மிகக் களிப்புடனே மக்கள் அங்கு வாழ்வார்.

3. வாழ்ந்திடும் கிராமங்களில் வாசம் செய்வர் குடிசையிலே
தாழ்வான முன்பாகத்தில் தடுத்திடுவார் திறந்தவெளி தானே
அதில் அமைத்திடுவர் கம்பளத் தரிகள்.

4. ஓடைகளில் நீரிறைத்து உழுது அங்கே பயிர்செய்வார்
பொதி பொதியாய்ப் பருத்திதனை பஞ்சாலைக்கு
அதன் ஊதியத்தால் மகிழ்வுடனே வாழ்வார்.

5. இரும்புச்சீப்பால் கோதிப்பின் இணங்கியே கைராட்டில்நூலை
விருப்பமுடன் நூற்றுச் சுற்றி விருப்புடனே அருந்திடாமல் காக்க
புளி விதைப் பசையைத் தடவி பலமாக்க.

6. மந்தைகளாய் ஆடுகளை மலையினடிவாரங்களில்
சிந்தைகளி பாட்டுப்பாடி சிறுவர்களே மேய்த்திடுவார் தேடி
இலை சேர்த்திடுவார் தரட்டியைக் கையாடி.

7. ஓட்டிவந்து மந்தைகளை ஓங்கிநீண்ட தரட்டியுடன்
மேட்டிமையாய்ப்பட்டியிலே மென்தழைகள் இலையுடனே தானே
அவர் விரட்டியே அடைப்பாரங்கு தானே.

8. கோடைகாலத்தினிலே கொண்டுசென்ற ஏரிகளில்
ஆட்டைக்கழுவி கூலி ஆட்கள் நீண்ட கத்திரிகள் கொண்டு
மயிரற்றுவிழக் கத்தரிப்பதுண்டு.

9. பக்குவம்சேர் கம்பளங்கள் பலவகையதாகச் செய்து
முக்கியே தண்ணீர் நனைத்து முழுதும் கயிர் கட்டிவிலே சேர்த்து
முயன்று மிருதுப்படும் கம்பளங்கள் நேர்த்தி.

Reg. No. M. 1534

விடுகதைகள்

இது என்ன?

1. இருண்டதோர் காட்டிற்கு 10 பேர் வேட்டைக்குப்போக, மிறண்டதோர் பன்றி 8 வளைத்துவர இரண்டு பேர் சுட்டார்கள்.

2. அடி சிவப்பு குண்டுபோலிருக்கும், நடு பச்சை குழல்போல் இருக்கும், நுனி வெள்ளை முத்துபோல் இருக்கும்.

G. Krishnamurthi.

3. உடலில்லா மனிதன் ஊரெல்லாம் திரிகிறான்.

4. ஏரிக்கரை உயர்ந்திருக்கும், எட்டிப்பழம் சிவந்திருக்கும், காகம் கறுத்திருக்கும், காக்கைக்குஞ்சு வெளுத்திருக்கும்.

A. Zacharias.

5. ஓடுவான், பாடுவான், ஒற்றைக்காலில் நிற்பான்.

A. M. Chellasamy.

6. கூட்டோடு மான் மேயக்கண்டீரோ மந்திரி, இரு கொம்போடு மான் மேயக்கண்டேனே ராஜாவே.

K. Savarimuthu.

7. உருவமில்லா உயிருமில்லா ஒரு பெரும் பாவி நான் ஆவேன். என்னைக் காண்கின்ற காசினி மாந்தர் குருடராவர்.

B. Abdul Raxack.

[துறிப்பு] சென்ற மாதத்திய அதாவது கொத்து 36 மலர் 1, பக்கம் 14-ல் போட்டிருந்த விடுகதைகளுக்குச் சரியான விடைகள் இதுவரையில் யாரும் தரவில்லை. இம்மாதத்திலாவது விடைகளை எதிர்பார்க்கிறோம். மேலும் விடுகதைகளை அனுப்புவோர் விடைகளையும் சேர்த்து அனுப்பவேண்டும், இன்றேல் அவர்களது விடுகதைகளை இதில் பிரசுரிக்க இயலாது. ஆகவே இம்மாதம் முடிவதற்குள் மலர் 1 ; 2-ல் போடப்பட்டுள்ள விடுகதைகளின் விடைகளைச் சேர்த்து அனுப்பக்கடவர். (ப-ர்)

Editor and Publisher: Rev. Fr. A. Lourduswami, B. A., L. T.,
Headmaster, R. C. Secondary Training and High School.

Printed by Rev. Fr. A. Susai Regis,
Supt.. St. Joseph's Industrial School Press, Trichinopoly.
Q. H. Ty.—I, 13—8—1945.